சார்பு நீதிமன்றம், விருதுநகர்

H.M.O.P.No: 23/2021 Date: 13.09.2024

மனுதாரர் தரப்பு சாட்சி–1(Pw1)ன் வாக்குமூலம் (1872ம் ஆண்டு சாட்சிய சட்டம் 144 வது பிரிவின்படி திருமதி.சேர்மக்கனி கிரேடு 2 பெஞ்ச் கிளார்க் என்பவரால் ஆணையிட்டு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்படுகிறது)

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சுகுமார் | சாதி | : | -- |
| த/பெ | : | மகாலிங்கம் | சமயம் | : | -- |
| கிராமம் | : | வடமலைக்குறிச்சி | தொழில் | : | |
| தாலுகா | : | விருதுநகர் | வயது | : | 35 |

முதல் விசாரணை

நான் இம்மனுவில் மனுதாரர் ஆவேன். நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தை என் சாட்சியத்தின் ஒரு பகுதியாக வாசித்துக்கொள்ள வேண்டுகிறேன். திருமண பத்திரிக்கை **ம.சா.ஆ.1.** திருமண பதிவு சான்று ஜெராக்ஸ் **ம.சா.ஆ.2.** குழந்தைகள் பிறப்பு சான்றிதழ் ஜெராக்ஸ் **ம.சா.ஆ.3(வரிசை)** (எண்ணம்–2)(அசலுடன் ஒப்பிடப்பட்டது). எனது ஆதார் அடையாள அட்டை ஜெராக்ஸ் **ம.சா.ஆ.4.** (அசலுடன் ஒப்பிடப்பட்டது). எனது குடும்ப அட்டை ஜெராக்ஸ் **ம.சா.ஆ.5.** (அசலுடன் ஒப்பிடப்பட்டது). நானும், எதிர்மனுதாரரும் சேர்ந்து எடுத்துக்கொண்ட புகைப்படம் தாக்கல். மனுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை–**

எனக்கும், எதிர்மனுதாருக்கும் 22.11.2015ம் தேதியன்று திருமணம் நடைபெற்றது. எங்களுக்கு சாய்ராம், சாய்லட்சுமணன் என்ற 2 ஆண்

குழந்தைகள் உள்ளது. இரு குழந்தைகளின் முதல் பிறந்த நாள் 2020 ம் வருடம் எனது மனைவி வீட்டில் வைத்து கொண்டாடினேன் என்றால் சரிதான். 2020 ம் ஆண்டு எனது மகன்களின் பிறந்த நாளை கொண்டாடிய பிறகு தான் சென்னை, ஜபகார்பேட்டையில் நானும், எதிர்மனுதாரும் சேர்ந்து வாழ்ந்தோம் என்றால் சரிதான். எனது மகன்களின் முதல் தலைமொட்டைக்கு அகத்தாபட்டியில் உள்ள குலதெய்வ கோவிலில் நான், எனது தாயார், அண்ணன், அண்ணி பங்கேற்றோம் என்றால் சரிதான். எனது குழந்தைகளின் புன்னிய தானத்திலும் நான் பங்கேற்றேன் என்றால் சரிதான். திருமணத்திற்கு எனக்கு 3 பவுன் தங்க நகைகள் அணிவித்தார்கள் என்றால் சரிதான், எதிர்மனுதாருக்கு 30 பவுன் கொடுத்தார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எனக்கு இருசக்கர வாகனம் வாங்க எதிர்மனுதாரர் வங்கி மூலமாக ரூ.67,000/– கொடுத்தார் என்றால் சரிதான். ஜபகார்பேட்டையில் உள்ள வீட்டிற்கு வாடகை நான் தான் செலுத்தி வந்தேன்.

எதிர்மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் வேண்டுக்கோளுக்கிணங்க குறுக்கு விசாரணை மற்றொரு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.